# சினிமா

## இடிமுழக்கம், கானல் இரு குறும்படங்கள்

**ஏஆர்**
*ஒரு பேப்பருக்காக*

குறும்படம் ஒன்றினைப் பார்த்து நான் மிக அதிர்ந்து போனேன். ‘இடிமுழக்கம்’ என்பது அக்குறும்படத்தின் பெயர். சுமார் இருபது நிமிடங்களாலான இக்குறும்படம் இரண்டு மூன்று நாட்களுக்கு என்னுள் அதிர்வைத் தந்தது. தரிசனம் தொலைக்காட்சியில் ஒரு நாளில் பொழுதுபட்ட நேரம் பார்த்தேன்.

ஒளித்தொகுப்பையும் படத் தொகுப்பையும் டெசுமன் செய்திருக்க எண்ணம் ஆக்கம் இரண்டினையும் சதா பிரணவன் செய்து பிரதான பாத்திரத்தில் நடித்துமிருந்தார். மிகச் சின்னப்பையனாக இருந்தார் சதாபிரணவன். இவரிடமா இவ்வளவு ஆற்றல்? இந்தக் கொம்புகள் இன்னும் சீவப்பட்டால் ஈழத்துச் சினிமாவின் அடையாளத்தை உலகெங்கும் காட்டுவார்கள்.

இடிமுழக்கம் என்ற இக்குறும்படம் சொன்ன கதை மிக எளிது. வேலை இல்லாத, ஒழுங்கான வதிவிட அனுமதி இல்லாத சிறு பெடியள் குழு. காவாலிகளாக, ரவுடிகளாக மாறி இடிமுழக்கம் என்ற பெயரில் வன்முறைக் கும்பலாக மாறுகிறார்கள். அக்குழுவின் செயல்பாடுகளை கிண்டலுடன் மெல்லிய நகைச்சுவை இழையோட அற்புதமாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

உரையாடல் தவிர்க்கப்பட்டு, உரைஞர் குரலாக (Narration) காட்சிப்படுத்தப்பட்ட இக்குறும்படம், சொல்ல வந்ததை தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறது. எழுத்துக் காட்டுவதில் இருந்து (Title card) நேர்த்தியான கலைப்படைப்பை நாம் காணமுடிகிறது. நீர்ல் மிதந்து அமிழ்ந்து போகிறது எரிந்த சிகரட் துண்டு. பின்னணியில் இக்காட்சி நெளிந்து ஓடுகிறது. அதுவே இக்குறும்படத்தின் வித்தியாசத்தை வெளிக்காட்டி விடுகிறது.

ஒரு குறும்படம் எடுக்கிறோம் என்று பிரக்ஞை பூர்வமாக இல்லாமல் மிக இயல்பாக படம் பிடிக்கப்பட்டிருக்கிறது. மிக எளிமையான திரைமொழியினை இந்த இடிமுழக்கம் கொண்டிருக்கிறது.

இதில் ஆச்சரியம் தந்த இன்னொரு விசயம் என்ன வென்றால் ஒளிப்பதிவும், படத்தொகுப்பும். டெசுமன் அதைச் செய்திருந்தார். குறிப்பாக படத்தொகுப்பு நேர்த்தி மிக்கதாக இருந்தது. ஒரு தேர்ந்த படத்தொகுப்பாளரின் வேலைபோல இருந்தது, இவரின் படத்தொகுப்பு. விக்ரமனின் இசைக்கோர்வையையும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

சதாபிரணவனுக்கும், டெசுமனுக்கும் அவர்களைச் சூழ நின்ற கலைஞர்களுக்கும் என் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும். இச்சினிமா முயற்சி உங்களை வெறும் சின்னப் பையன்களாக என்னைப் பார்க்க வைக்கவில்லை. நீங்கள் பெரியவர்கள் ஆகின்றீர்கள். இன்னும் சாதிப்பீர்கள். நம்புகிறேன்.

கலைகளின் நாடு பிரான்ஸ் என்றும் கலைகளின் நகரம் பாரிஸ் என்றும் சொல்கிறார்கள். அது உண்மை என்று அங்கு வாழும் தமிழர்களும் நிரூபிக்கிறார்கள். ‘இடிமுழக்கம்’ பிரான்ஸ் தமிழர்களின் குறும்படம். அதேபோல் பிரான்ஸ் தமிழர்களின் இன்னொரு குறும்படத்தையும் தரிசனம் தொலைக்காட்சியில் பார்த்தேன். ‘கானல்’ அக்குறும்படத்தின் பெயர்.

ரிரிஎன்னில் தொலைக்காட்சிக் கலைஞராகப் பணி புரிந்த றொபேட் என்பவர் இக்குறும்படத்தை ஆக்கியிருக்கிறார். இக்குறும்படத்தைப் பார்த்து முடித்தவுடன் அது எனக்குள் திகைப்பை ஏற்படுத்தியிருந்தது. அடிப்பாகம் தேய்ந்துபோன இரண்டு சப்பாத்துக்களும், திரை முழுவதையும் நிறைத்தது. ஒரு குறியீட்டு ஓவியமாக காட்சியை நெகிழ வைத்தது நான் நெகிழ்ந்துதான் போனேன்.

தனது வரவு செலவுத் திட்டத்தில் புதிதாக ஒரு சோடி சப்பாத்துக்களை வாங்குவதற்கு பணம் ஒதுக்க முடியாத ஒரு கதையைச் சொல்கிறது இக்குறும்படம். சுமார் இருபது நிமிடங்களிலாள இக்குறும்படம் தனது காட்சிப்படுத்தலில் ஒருவரின் இயலாமையை அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது.

சப்பாத்து வாங்குவதுதான் பிரச்சினை என்பதை இறுதிக்காட்சிதான் நமக்குத் தெரிவிக்கிறது. அதுவரை அவன் ஒரு பெண்ணைப் பார்க்கப் போகிறான் என்றுதான் நாம் புரிந்து கௌ்கிறோம். அப்படிக் காட்சிப்படுத்தியிருக்கிறார் நெறியாளர்.

இந்த உத்தி எனக்குப் பிடித்துப் போயிற்று. ஒரு சப்பாத்து வாங்குவது என்பதே ஒரு பெண் பார்க்கும் படலத்துக்கு இணையாக வார்க்கப்பட்டு அவன் இயலாமையை வெளிக் கொணர்கிறது. அசோகமித்திரன் போன்ற தேர்ந்த படைப்பாளியின் சிறுகதைகள் முடிவு வரியில்தான் முழுக்கதையின் பரிமாணத்தைக் காட்டுவது போல, இக்குறும்படமும் தன் முடிவுக்காட்சியிலேயேதான் தன் முழுப்பரிமாணத்தையும் எய்துகிறது.

தான் புதுச் சப்பாத்து வாங்கப் போகிறேன் என்ற நம்பிக்கையில் பிய்ந்து தேய்ந்துபோன பழைய சப்பாத்துக்களை குப்பைக் கூடைக்குள் போட்டுவிட்டு வருகிறான். புதிய சப்பாத்துக்கள் வாங்கப்படவில்லை. மீண்டும் குப்பைக் கூடையைத் துழாவி தன்னுடைய பழைய சப்பாத்துக்களை எடுத்துக் கொண்டு நடக்கிறான். திரை முழுக்க தேய்ந்த இரண்டு சப்பாத்துக்களும் ஆக்கிரமிக்க திரை இருள்கிறது. எனக்கு அது நெருட வைத்த ஓவியம். றொபேட் கையைத் தாருங்கள். பற்றிக் குலுக்கி விடுகிறேன்.

டெசுமன், சதாபிரணவன், றொபேட் இவர்கள் போன்ற இன்னும் சில ஈழத்துத் தமிழ் இளைஞர்களின் கைகளில்தான் ஈழத்துத் தமிழ்ச் சினிமா இருக்கிறது. இவர்கள் நல்ல சினிமா தர தமிழ்நாட்டுக்கு ஓடவில்லை. தங்களிடம் உள்ளதை தரமாக திறமாகத் தந்து விடுகிறார்கள். ஐந்து பாடல் காட்சிகளும், ஆறு சண்டைக் காட்சிகளும் என்று சினிமா எடுக்கவில்லை. கறுப்புக் கண்ணாடியும், கறுப்புச் சட்டையும் கையில் ஏ.கே47உம் கொண்டு சினிமா எடுக்கவில்லை. காதல் சுவாசம், காதல் கடிதம் என்று காதலை வைத்து கதறி ஒப்பாரி வைக்கவில்லை. தமிழ் நாட்டின் பல சினிமாக்களே குப்பை. அந்தக் குப்பைகளை கொப்பி பண்ணி, தங்கள் காசையும், நேரத்தையும் வீணாக்கி எங்களையும் எரிச்சலுக்குள்ளாக்கவில்லை.

நெஞ்சுக்கு நிம்மதியாக, நெஞ:சுக்கு நிறைவாக சினிமாக்கள் தருகிறார்களே! இவர்கள் வாழ்க. நல்ல வளத்துடன் நமக்கு இன்னும் சினிமாக்கள் தருக. ஈழத்தமிழர் சினிமாக்கலையை இன்னும் மேலே எழ வைக்க. எங்கள் வேண்டுகோள் இதுவே.



**விமர்சனம்**

## பிரிவோம் சந்திப்போம்

குத்துப்பாட்டு, ஈட்டிச் சண்டை, இரட்டை அர்த்த டயலாக்குகள் இவற்றையெல்லாம் தவிர்த்து வெளியாகியுள்ள கமர்ஷியல் படம்தான் பிரிவோம் சந்திப்போம்.

உறவுகளுக்கு மத்தியில் கூட்டுக்குடும்பத்தில் வளரும் சேரன். அதற்கு நேர் எதிராக ஒரே பெண்ணாக பிறந்துவிட்ட சினேகா. இருவருக்கும் திருமணம் செய்து வைக்கிறார்கள்.

தியான மண்டபத்து அமைதியை, திருவிழா கூட்டம் அசத்துகிறது. இந்த உறவுகளும், அவர்கள் தரும் அன்பும் நிரந்தரம் என்று மகிழும் சினேகாவின் ஆசையில் திடீரென்று இடி விழுகிறது. சேரனும், சினேகாவும் மலைப்பிரதேசத்துக்கு தனிக்குடித்தனமாக இடம் பெயர்கிறார்கள்.

அங்கே தமிழ் சினிமா இதுவரை பார்த்திராத வில்லன். அதுதான் தனிமை. சேரன் வேலைக்கு போய்விட தனிமையில் இருக்கும் சினேகா படுகிற வேதனையை அப்படியே அப்பட்டமாக காட்டியிருக்கிறார் இயக்குனர் கரு.பழனியப்பன்.

சினேகாவுக்கு இப்படி ஒரு சவாலான கேரக்டர் கிடைத்தால் விட்டு விடுவாரா என்ன? மகிழ்ச்சி, ஏமாற்றம், விரக்தி, வெறுமை எல்லாவற்றையும் நொடி பொழுதில் புரிய வைக்கின்றன சினேகாவின் கண்கள். நமக்கு எல்லாம் தருகிற அந்த கடவுளுக்கு நன்றி சொல்லணும் என்றபடி, ஒவ்வொரு முறையும் உண்டியலை நிரப்புவது அழகு.

சேரன் சினேகா காதலில் சுவாரஸ்ஈயங்களுக்கும் பஞ்சமில்லை. திருமணத்திற்கு முன்பு சினேகாவை தனிமையில் சந்திக்க விரும்பி, அவர் செய்யும் முயற்சிகளும், அது பலிக்காமல் போய் தவிப்பதும் கலகலப்பு.

ஒரு மருத்துவராக மட்டுமல்லாமல், அந்த ஊரின் செல்லப்பிள்ளையாகவே வலம் வரும் ஜெயராம் சட்டென்று சினேகாவின் மன ஓட்டத்தை புரிந்து கொள்வது ஆறுதல். தானாக மருந்து எடுத்துக் கொள்ளும் பலருக்கு ஜெயராமின் அட்வைஸ் ரொம்ப அவசிஈயமான விசயம்.

எம்.எஸ்.பாஸ்கர், லட்சுமணன் டயலாக்குகள் கரு.பழனியப்பன் ஒரு பொறுப்பான பத்திரிகையாளர் என்பதையும் பறைசாற்றுகிறது. காந்தியைப் பற்றியும், மதுக்கடைகளையும் பற்றி டயலாக் எழுதி அசத்தியிருக்கிறார் இயக்குனரர்.

தான் கருப்பு இல்லை. லைட் புரோன் கலர் என்று கூறி தன் கலருக்கு விளக்கம் கொடுக்கும் கஞ்சா கருப்புவின் கலக்கல்.

இரண்டாம் பாதியின் துவக்கத்திலிருந்தே சண்டிக்குதிரையாகி அடம் பிடிக்கிறது திரைக்கதை. நேரம் போகாமல் தவிக்கிறார் சினேகா என்ற ஒரு விஷயம் திரும்ப திரும்ப ரிப்பீட் ஆகி, ரசிகர்களை நெளிய வைத்திருப்பதை தவிர்த்திருக்கலாம்.

பிரிவோம் சந்திப்போம் தனிமையில் இருக்கும்போது சிந்திப்போம்.

*- தினமலர்*

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

**seven** | zero
graphic designers
**020 7043 4319**
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ



creative artwork from **concept to design**